1974 சனவரி 30]

அண்ணா சாலையில் புதிய கட்டடங்கள்

* 252 வினா.—திரு. கே. எ. வகாப் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் உள்ள அண்ணா சாலையில் அமைந்துள்ள அரசாங்க எஸ்டேட்டில் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விடும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது நமது அரசாங்கக் கட்டிடங்களுக்காக நிறைய வாடகை கொடுத்துக்கொண்டு இருக்கிற காரணத்தால் ஒரு திட்டமிட்டு, அவற்றை வசதியான, வாடகை குறைவான இடத்தில் அமையச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனியாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. சீக்கிரத்தில் அதைப் பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, அண்ணா சாலையில் அமைந்துள்ள அரசாங்க எஸ்டேட்டில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டிடங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, பழைய நிலையில் இருக்கின்றன. அவற்றை அகற்றி புதிய கட்டிடங்களைக் கட்ட திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதுவும் திட்டத்தில் ஒன்றாகும்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் ஏற்கனவே வாடகைக்கு விடப்பட்ட கட்டிடங்கள் பேரில் ஏராளமான வாடகை பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையானால் அந்த பாக்கியை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, அண்ணு சாலையிலிருக்கின்ற அரசாங்க எஸ்டேட்டில் 'ஐந்து நட்சத்திர ஓட்டல்' கட்டப்படலாமென்று முன்பு அறிவித்திருந்தார்கள். அப்படிப்பட்ட திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவரவர்களே, டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமேதேனும் உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட திட்டமேதும் இல்லை.

குளித்தலை வட்டத்திலுள்ள சிவாயம்குளம்

*253 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிவாயம் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(உ) காலதாமதத்திற்கு உரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 1963-ம் ஆண்டு.

(இ) இத்திட்டத்திற்கான ரூ. 5.63 லட்ச மதிப்பீடு அரசினுல் 1973-ஆம் ஆண்டு டிசம்பரில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(உ) திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு திருத்தங்கள் தேவைப்பட்டதாலும், நிலங்களின் அளவு வேறுபாடுகளை சரிபார்த்ததிலும் அதிகாரிகள் முடிவான அறிக்கை அரசுக்கு ஏப்ரல் 1973-ல் தான் கிடைக்கப்பெற்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அளவுக்கு புதுப்பிக்கின்ற திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டதா ? வேலை துவங்கப்பட்டதா ? அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கும் குளத்திற்கும் எவ்வளவு தூரம் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அடிக்கல் நாட்டப்பட்ட இடத்திற்கும் குளத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்ற தகவல் என்னிடமில்லை. வேலைகள் விரைவில் துவங்கப் பெறும்.